வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்— வான்மதி

தேதி 7.9.2025 நேரம் மாலை 6.10 மணி

------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

- பிரான்ஸ் அதிபர் திரு இமானுவேல் மெக்ரானுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி தொலைபேசியில் உரையாடினார்.

- ஜிஎஸ்டி வரிக்குறைப்பு நடவடிக்கை கூட்டுறவு துறையை பெருமளவிற்கு ஊக்குவிக்கும் என்று கூட்டுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

- அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஜிஎஸ்டி வரி சீர்திருத்தம் வரும் 22 ஆம் தேதி அமல்படுத்தப்படும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

- இந்த ஆண்டின் அரிய முழு சந்திரகிரகணம் இன்று நிகழ உள்ளது.

மோடி - மெக்ரான் (14)

பிரான்ஸ் அதிபர் திரு இமானுவேல் மெக்ரானுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி தொலைபேசியில் உரையாடினார். இந்த உரையாடலின் போது, உக்ரேன்-ரஷ்யா பிரச்சனைக்கு அமைதியான தீர்வு காண்பது தொடர்பாக தங்களது கருத்துக்களை பறிமாறிக் கொண்டனர். இருநாட்டு

தலைவர்களும் பொருளாதாரம், பாதுகாப்பு, அறிவியல், தொழில்நுட்பம், விண்வெளி உள்ளிட்ட துறைகளில் இணைந்து செயல்படுவது குறித்து விவாதித்தனர். மேலும், இந்தியா-பிரான்ஸ் இடையேயான உறவுகளை மேம்படுத்துவது குறித்தும் அவர்கள் ஆலோசித்தனர். பிராந்திய மற்றும் சர்வதேச பிரச்சனைகள் குறித்தும் இருநாட்டு தலைவர்களும் விவாதித்தனர். இந்தியாவில் நடைபெற உள்ள செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டிற்கு வரவிருக்கும் அதிபர் மெக்ரானை வரவேற்க தாம் ஆவலுடன் காத்திருப்பதாக பிரதமர் தெரிவித்தார். உலக அமைதி மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்த தொடர்ந்து இணைந்து பணியாற்றவும் இரு நாட்டு தலைவர்களும் ஒப்புக் கொண்டனர்.

மோடி வாழ்த்து (13)

பொதுத் தேர்தல் மற்றும் பிராந்திய தேர்தல்களில் மகத்தான வெற்றிப் பெற்றதற்காக கயானா அதிபர் திரு இர்பான் அலிக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், வலுவான வரலாற்று உறவு மற்றும் மக்களுக்கு இடையிலான உறவுகளில் இந்தியா-கயானா கூட்டாண்மையை உறுதிப்படுத்த ஆவலுடன் இருப்பதாக பிரதமர் தெரிவித்துள்ளார். பிரதமர் திரு நரேந்திர மோடியின் வாழ்த்துக்கு பதில் அளித்துள்ள கயானா அதிபர், இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்கனவே உள்ள வலுவான மற்றும் சுமுகமான உறவுகளை மேலும் வலுப்படுத்த

பிரதமர் இந்திய அரசு மற்றும் இந்திய மக்களுடன் தொடர்ந்து பணியாற்ற ஆவலுடன் இருப்பதாக தெரிவித்துள்ளார். இதனிடையே, இந்தியா-கயானா இடையே தூதரக உறவுகள் 1965 ஆம் ஆண்டு முதல் தொடர்வதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஜிஎஸ்டி 1 (3)

ஜிஎஸ்டி வரி சீர்திருத்தங்கள் சாமானிய மக்களின் நலனை கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வரி சீர்திருத்தங்கள் இம்மாதம் 22 ஆம் தேதி நடைமுறைக்கு வர உள்ளது. இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு.....

**வாய்ஸ்**

ஜிஎஸ்டி 2 (16)

**வாய்ஸ்**

கடந்த புதன் கிழமை நடைபெற்ற ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் வரி சீர்திருத்தங்கள் முறையே 5, 12, 18 மற்றும் 28 சதவிகிதம் என 4 அடுக்கு அமைப்பில் இருந்து, 5 சதவிகிதம் மற்றும் 18 சதவிகிதம் என்ற 2 அடுக்கு கட்டமைப்பாக எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த சீர்திருத்தங்கள் பல துறைகளில் வரி விகிதங்களை குறைத்துள்ளது. லாரிகள், பேருந்துகள்

மற்றும் டெலிவரி வேன்கள் உள்ளிட்ட வணிக வாகனங்கள் புதிய ஜிஎஸ்டி வரி கட்டமைப்பின் கீழ் பயனடையும். ஏனெனில், அவை தற்போது, முந்தைய 28 சதவிகித்தில் இருந்து 18 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. மேலும், சரக்கு மற்றும் பொது போக்குவரத்தின் மூலம் விவசாய பொருட்களுக்கான விலையும் கணிசமாக குறைய வாய்ப்புகள் உள்ளன. சரக்கு மற்றும் போக்குவரத்திற்கான 3 ஆம் தரப்பு காப்பீட்டிற்கான ஜிஎஸ்டி வரி 12 சதவிகித்தில் இருந்து 5 சதவிகிதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது. இத்தகைய நடவடிக்கைக்கு இந்திய ஆட்டோ உற்பத்தியாளர்கள் சங்கம் நன்றி தெரிவித்துள்ளது. இந்த அறிவிப்பு மலிவு விலையில் வாகனங்கள் கிடைப்பதை உறுதி செய்வதாகவும், உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஜிஎஸ்டி அமைச்சகம் 1 (16)

ஜிஎஸ்டி வரி சீர்திருத்த நடவடிக்கை கூட்டுறவு துறையை பெரும் அளவிற்கு வலுப்படுத்தும் என்று அத்துறைக்கான அமைச்சகம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. அண்மையில் அறிவிக்கப்பட்ட ஜிஎஸ்டி வரிக்குறைப்பு நடவடிக்கையால் கூட்டுறவு துறை விவசாயிகள், கிராமப்புற நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றிற்கு பெரும் ஊக்குவிப்பாக இருக்கும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

வரிக் குறைப்பு நடவடிக்கையால் 10 கோடிக்கும் மேற்பட்ட பால் பண்ணை விவசாயிகள் பயனடைவார்கள் என்றும், இந்த சீர்திருத்தங்கள்

கூட்டுறவு துறையை வலுப்படுத்துவதுடன், அவற்றின் உற்பத்தி பொருட்கள் இடையே போட்டித் தன்மையை அதிகரிக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும் வரிக்குறைப்பு நடவடிக்கை கூட்டுறவு சங்கங்களின் வருமானத்தை அதிகரிப்பதுடன், கிராமப்புற தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் என்றும் அமைச்சகத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வரிக்குறைப்பு நடவடிக்கையின் மூலம் வெண்ணெய், நெய் போன்ற பொருட்களுக்கான வரி 12 சதவிகிதத்தில் இருந்து 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. மேலும், இரும்பு, எஃகு, அலுமினியத்தால்

ஜிஎஸ்டி அமைச்சகம் 2 (5)

செய்யப்பட்ட பால் கேன்கள் மீதான வரியும் 12 சதவிகித்தில் இருந்து 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளது. அமோனியா, சல்பூரிக் அமிலம் மற்றும் நைட்ரிக் அமிலம் போன்ற முக்கிய உர தயாரிப்புகளுக்கும் ஜிஎஸ்டி வரி 18 சதவிகித்தில் இருந்து 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சிவராஜ் சிங் சவுகான் (12)

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் வேளாண் துறையில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார்.

மத்திய பிரதேச மாநிலம் போபாலில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வரிக்குறைப்பு நடவடிக்கை, குறிப்பாக, சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு பயனளிக்கும் என்று கூறினார். வேளாண்மைக்கு தேவையான உபகரணங்கள் மீதான வரிக்குறைப்பு விவசாயிகளுக்கான செலவை பெருமளவிற்கு குறைத்து விவசாயிகளுக்கு அதிக அளவு லாபத்தை அளிக்கும் என்றும் அவர் கூறினார். உயிரி உரங்கள், நுண்ணுட்ட சத்து மீதான வரிக்குறைப்பும் விவசாயிகளுக்கு பயனளிக்கும் என்றும், இதன் மூலம் ரசாயண உரங்களை கைவிட்டு, உயிரி உரங்களை பயன்படுத்த விவசாயிகளை ஊக்குவிக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

ஜிதேந்திர சிங் (13)

நாட்டை உலகளாவிய புத்தொளி நிறுவனங்களின் மையமாக மாற்ற இளைஞர்கள் முன் வர வேண்டும் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இளைஞர்களுக்கு செயல் திறனை மேம்படுத்துவதற்கான வளாக மையம் என்ற திட்டத்தை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்த மையம் இளைஞர்களின் திறமையை மேம்படுத்தும் என்று நம்பிக்கை தெரிவித்தார். இளைஞர்கள் தங்களின் சொந்த புத்தொளி நிறுவனங்களை தொடங்குவதன் மூலம் அடுத்தக் கட்ட முன்னேற்றத்திற்கு செல்ல முடியும் என்று அவர் கூறினார்.

புதிய இளம் கண்டுபிடிப்பாளர்கள் புத்தொளி நிறுவனங்கள் மூலம் தங்களது திறமைகளை உலகிற்கு எடுத்துரைக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார். மேலும், வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதில் அவர்களது பங்கையும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

நிர்மலா சீதாராமன் (8)

அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஜிஎஸ்டி வரி சீர்திருத்தம் வரும் 22 ஆம் தேதி அமல்படுத்தப்படும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக தனியார் தொலைக்காட்சிக்கு அவர் அளித்த பேட்டியில், ரஷ்யாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெயை வாங்கும் என்று திட்டவட்டமாக தெரிவித்தார். ஜிஎஸ்டி சீர்திருத்தம் மூலம் மக்களுக்கு நிறைய நன்மைகள் கிடைக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

சந்திரகிரகணம் 1 (3)

இந்த ஆண்டின் அரிய முழு சந்திரகிரகணம் இன்று நிகழ உள்ளது. இதை வெறும் கண்ணால் காண முடியும் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு......

**வாய்ஸ்**

சந்திரகிரகணம் 2 (16)

**வாய்ஸ்**

சூரியன்-நிலவு-பூமி இவை மூன்றும் ஒரே நேர் கோட்டில் வரும் போது கிரகணங்கள் நிகழ்கின்றன. அப்போது நிலவின் நிழல் சூரியனை மறைத்தால் அது சூரிய கிரகணம் என்றும், பூமியின் நிழல் சந்திரனை மறைத்தால் அது சந்திரகிரகணம் எனவும் அழைக்கப்படுகிறது. இந்திய நேரப்படி இன்றிரவு 9.57 மணி முதல் 1.27 மணி வரை மிக நீண்ட சந்திரகிரகணமாக அமையும். இதில் முழு சந்திரகிரகணம் இரவு 11.42 முதல், 12.33 மணிவரை தென்படும். அப்போது சந்திரன் அடர் சிவப்பு நிறத்தில் மிளிரும். இது, ரத்த சிவப்பு நிலா என்று அழைக்கப்படுகிறது. இந்நிகழ்வை ஐரோப்பா, ஆசியா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்காவின் கிழக்கு பகுதி, ஆர்ட்டிக், அண்டார்டிக், இந்திய பெருங்கடல் ஆகிய பகுதிகளிலும், இந்தியாவில் சென்னை, பெங்களூரு உள்ளிட்ட பல்வேறு இடங்களிலும் தெளிவாக பார்க்க முடியும். இந்த முழு கிரகணத்தை வானம் தெளிவாக இருந்தால் வெறும் கண்ணால் பார்க்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி அறிவியல் இயக்கம் சார்பில் இன்றிரவு 10 மணி முதல் நள்ளிரவு 12.30 மணி வரை கடற்கரை காந்தி திடலில் தொலைநோக்கி மூலம் படக்காட்சிகளை காண ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக புதுச்சேரி அறிவியல் இயக்க ஒருங்கிணைப்பாளர் ஹேமாவதி தெரிவித்துள்ளார். புதுச்சேரி வானொலி நிலைய பண்பலை அலைவரிசையில் ஒலிபரப்பு செய்கிறது.

பிட் இண்டியா (14)

ஞாயிற்றுக்கிழமைகளில் மேற்கொள்ளப்படும் சைக்கிள் பேரணி ஒரு இயக்கமாக மாறி உள்ளது என்று மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார். இந்திய ரயில்வேயுடன் இணைந்து புதுடெல்லியில் இன்று சைக்கிள் பேரணி நடைபெற்றது. நாடு முழுவதும் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களில் இந்த பேரணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த பேரணியில் பங்கேற்று பேசிய மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா, உடல் தகுதியுடன் சுதேசி பொருட்களை வாங்குங்கள் என கேட்டுக்கொண்டார். பேரணியில் 50 க்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டதாக அவர் தெரிவித்தார். சைக்கிள் ஒட்டுதல் பிட் இண்டியாவின் செய்தி என்றும், அதுவே சிறந்த பயிற்சி எனவும், மாசு கட்டுப்பாட்டிற்கான தீர்வு என்றும் தெரிவித்தார். ஜிஎஸ்டி வரி சீர்திருத்தங்கள் குறித்து பேசிய அவர், மிதிவண்டிக்கான ஜிஎஸ்டி 18 சதவிகிதத்தில் இருந்து 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

ஜெலன்ஸ்கி (13)

போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான அமைதி பேச்சுவார்த்தையில் பங்கேற்க மாஸ்கோ வர வேண்டும் என்ற ரஷ்ய

அதிபர் திரு விளாடிமின் புதினின் அழைப்பை உக்ரேன் அதிபர் திரு ஜெலன்ஸ்கி நிராகரித்துள்ளார். இது தொடர்பாக அமெரிக்க செய்தி நிறுவனத்திற்கு அவர் அளித்த பேட்டியில், சந்திப்பிற்கான இடத்தை ரஷ்யா நிர்ணயித்து இருப்பது பேச்சுவார்த்தையில் அந்நாட்டிற்கு உண்மையிலேயே அக்கறை இல்லை என்பதை காட்டுவதாக தெரிவித்துள்ளார். ஏவுகணை தாக்குதல்களால் உக்ரேன் நாள்தோறும் பற்றி எரியும்போது பயங்கரவாதிகளின் தலைநகருக்கு நம்மால் செல்ல முடியாது என்றும் அவர் தெரிவித்தார். வேண்டுமானால், ரஷ்ய அதிபர் திரு புடின் உக்ரேன் தலைநகருக்கு வரட்டும் என்றும் ஜெலன்ஸ்கி தெரிவித்தார். ஜெலன்ஸ்கியின் இந்த அறிவிப்பால் இருநாடுகளுக்கு இடையிலான அமைதி பேச்சுவார்த்தைக்கு இப்போது வாய்ப்பு இருக்கிறதா என்பது கேள்விக்குறியாகி உள்ளது.

வானிலை (6)

வளி மண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் இடி-மின்னலுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்புகள் உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, விழுப்புரம் உள்ளிட்ட 7 மாவட்டங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புகள் உள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.